| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு. தர்மராஜ்<br>த.பெ. திரு. வெங்கடாசலம் | அ.வ.எண்.251/2011 | 25.09.2025 |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7) இவ்வழக்கு D அட்டவணை சொத்து என்பது புல எண்.364/1A யில் 1 ஏக்கர் 19 செண்டில் 66 செண்ட் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். D அட்டவணை சொத்தின் பகுதி சொத்துக்களை E மற்றும் F அட்டவணை சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி DEF சொத்துக்கள் அனைத்திற்கும் எனது மூல ஆவணம் வா.சா.ஆ.10 என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.10 ஆவணம் 12.03.1932 ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

8) மேற்படி வா.சா.ஆ.10 ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்தது ஆதிதிராவிடர் சமூகத்தை சேர்ந்த முதலி மகன் மாரிமுத்து என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எழுதி வாங்கியது சிதம்பர ரெட்டியார் மகன் சுப்புரெட்டியார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சொத்து விபரத்தில் சிறுகனூர் கிராமம் புல எண்.364/1ல் 1 ஏக்கர் 29 செண்டில் வாரி உட்பட வடபுறம் 93 செண்ட் என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.

9) வா.சா.ஆ.10 ஆவணத்தின்படி மாரிமுத்துவிடம் இருந்து சுப்புரெட்டியார் 93 செண்ட்டை மட்டுமே கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி புல எண்.364/1ல் உள்ள 1 ஏக்கர் 29 செண்டில் 93 செண்ட்டை சுப்புரெட்டிக்கு கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள 36 செண்ட் மாரிமுத்துவிற்கு பாத்தியம் என்றால் சரிதான்.

10) வா.சா.ஆ.10 ஆவணத்தை தவிர மாரிமுத்துவிடம் இருந்தோ அவரது வாரிகளிடமிருந்தோ புல எண்.364/1 ல் வேறு சொத்துக்களை நாங்களோ, சுப்புரெட்டியாரோ எந்த கிரையமும் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.10 ன்படி புல எண்.364/1ல் 93 செண்டிற்கு கூடுதலாக எந்த உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் 14.10.1926 ல் ஏற்பட்ட சிறுகனூர் கிராமத்தின் ரீசெட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான்.

11) மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் புல எண்.364/1 ன் பழைய சர்வே எண்.562/1 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 29 செண்ட் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அதன் பட்டா எண்.447 என்றும், ஆதிதிராவிடர் வி. முதலி என்றும் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் கண்ட வி. முதலி என்ற பெயரின் அடிப்படையில், மேற்படி வி. முதலியின் மகன் மாரிமுத்துவால் வா.சா.ஆ.10 ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12) 1926 ம் ஆண்டு ரீசெட்டில்மெண்ட் ஆவணத்தின்படி சிறுகனூர் கிராமம் புல எண்.364/1 ல் 1 ஏக்கர் 29 செண்ட் நிலம் ஆதியில் ஆதிதிராவிடர் வி. முதலிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பட்டா எண்.447 ல் செலுத்தப்பட்ட வா.சா.ஆ.3 வரி ரசீதுகள், மாரிமுத்துவிடம் கிரையம் பெற்ற 93 செண்ட் நிலத்திற்கு தொடர்புடையது என்றால் சரிதான்.

13) வா.சா.ஆ.13 பத்திரம் 05.03.1959 ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை சுப்புரெட்டியார் மகன் ரெங்கசாமி ரெட்டியார் என்பவர், வீரன் மகன் வைரமுத்து என்பவருக்கு எழுதி

கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்தில் புலஎண்.364/1ல் உள்ள 1.29 ஏக்கரில் மேல்புறம் பாட்டைக்கும் முதலி பங்கிற்கு கிழக்கு என்னால் ஆறுமுகத்திற்கு விடப்பட்ட நிலத்திற்கும் தெற்கு, என் நிலத்திற்கும் மேற்கு, என் நிலத்திற்கும் முதலி நிலத்திற்கும் வடக்கு இதற்குட்பட்ட 5 செண்ட் நிலம் தபசிலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14) வா.சா.ஆ.13 ஆவணத்தில் கண்ட சொத்து மாரிமுத்துவிடம் இருந்து சுப்புரெட்டியார் கிரையம் பெற்ற 93 செண்டில் இருந்து 5 செண்ட் கிரையம் கொடுக்கப்பட்டதற்கான ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணம் 13.02.1979 தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை வீரன் மகன் வைரமுத்து என்பவர் கருப்பண்ணன் மகன் கண்ணனுக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான்.

15) மேற்படி நிலமும் புல எண்.364/1ல் சுப்புரெட்டியார் கிரையம் பெற்ற 93 செண்ட் நிலத்திற்கு கட்டுபட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆவணம் 20.11.1980 தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை கருப்பண்ணன் மகன் கண்ணன் என்பவர் லெட்சுமணனுக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். மேற்படி நிலமும் புல எண்.364/1ல் சுப்புரெட்டியார் கிரையம் பெற்ற 93 செண்ட் நிலத்திற்கு கட்டுபட்டது என்றால் சரிதான்.

16) சுப்புரெட்டியார் கிரையம் பெற்ற 93 செண்ட்டில் தான் 8 செண்ட் நிலம் பள்ளிக்கூடத்திற்காக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து சர்வேயர் உதவியுடன்

அளவீடு செய்வதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 12 வது பத்தில், சுப்புரெட்டியாரிடம் இருந்து கிரையம் வாங்கிய 93 செண்டில் நில ஆர்ஜிதம் செய்தது 10 செண்ட், வைரமுத்து, இந்திராணி, பள்ளிக்கூடத்திற்கு 10 செண்ட் கொடுத்தது போக மீதம் 66 செண்ட் எனது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்தாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

(வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)